செ.வெ.எண்.315/2009, நாள்:23.09.2009

**காஞ்சிபுரம் மாவட்ட வணிகர்கள், அத்தியாவசியப் பொருட்களை பதுக்கி வைத்தல் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் எச்சரிக்கை**

சமையல் எண்ணெய், எண்ணெய் வித்துக்கள், அரிசி, கோதுமை மற்றும் பயறு வகைகளின் விலையேற்றம் காரணமாக, மேற்கண்ட அத்தியாவசியப் பொருட்களை சில வணிகர்கள் பதுக்கி வைத்து கள்ளச்சந்தையில் விற்பதாக அரசுக்கு தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. மேற்கண்ட அத்தியாவசியப பொருட்களை எந்த அளவிற்கு வணிகர்கள் கையிருப்பு வைத்திருக்கலாம் என ஏற்கெனவே தமிழ்நாடு அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது. அதன்படி, பின்வரும் அளவிற்கு மட்டுமே சமையல் எண்ணெய், எண்ணெய் வித்துக்கள். அரிசி, கோதுமை மற்றும் பயிறு வகைகளை கையிருப்பு வைத்திருக்கலாம் என வணிகர்களுக்கு இதன்மூலம் தெரிவிக்கப்படுகின்றன.

எண்ணெய் வித்துக்கள் (உடைக்காத மணிலா உட்பட)

| இடத்தின் வகைப்பாடு | கையிருப்பு வைத்திருக்கக் கூடிய அளவு குவிண்டரில் | |
|---|---|---|
| | மொத்த வணிகர் | சிறுவணிகர் |
| பத்து லட்சத்திற்கு மேற்கொண்ட ஜனத்தொகை உள்ள நகரம் | 1500 | 100 |
| மூன்று லட்சத்திற்கும் மேற்பட்டு, பத்து லட்சத்திற்கு குறைவான ஜனத்தொகை உள்ள நகரங்கள் மற்றும் மாவட்ட தலைநகரங்கள் | 1000 | 75 |
| இதர பகுதிகள் | 500 | 50 |

சமையல் எண்ணெய் (தாவர எண்ணெய் உட்பட)

| இடத்தின் வகைப்பாடு | கையிருப்பு வைத்திருக்கக் கூடிய அளவு குவிண்டரில் | |
|---|---|---|
| | மொத்த வணிகர் | சிறுவணிகர் |
| பத்து லட்சத்திற்கு மேற்கொண்ட ஜனத்தொகை உள்ள நகரம் | 600 | 20 |
| மூன்று லட்சத்திற்கும் மேற்பட்டு, பத்து லட்சத்திற்கு குறைவான ஜனத்தொகை உள்ள நகரங்கள் மற்றும் மாவட்ட தலைநகரங்கள் | 400 | 12 |
| இதர பகுதிகள் | 250 | 08 |

அரிசி

| இடத்தின் வகைப்பாடு | கையிருப்பு வைத்திருக்கக் கூடிய அளவு குவிண்டரில் |
|---|---|
| அரிசி ஆலையை இயக்கும் வணிகர் | 3600 |
| அரிசி ஆலையை இயக்காத வணிகர் | 1000 |
| அரிசி ஆலைதாரர் | 1000 |
| அரிசி சில்லறை வணிகர் | 200 |

பயிறுவகைகள் (அனைத்து பயிறுகளும் சேர்த்து)

| இடத்தின் வகைப்பாடு | கையிருப்பு வைத்திருக்கக் கூடிய அளவு குவிண்டரில் | |
|---|---|---|
| | மொத்த வணிகர் | சிறுவணிகர் |
| மாநகராட்சிப் பகுதி | 2500 | 62.50 |
| மாவட்ட தலைமையிடம் | 1250 | 50 |
| இதர பகுதிகள் | 1250 | 50 |

கோதுமை

| இடத்தின் வகைப்பாடு | கையிருப்பு வைத்திருக்கக் கூடிய அளவு குவிண்டரில் | |
|---|---|---|
| | மொத்த வணிகர் | சிறுவணிகர் |
| மாநகராட்சிப் பகுதி | 1000 | 31.25 |
| மாவட்ட தலைமையிடம் | 750 | 18.25 |
| இதர பகுதிகள் | 437.50 | 12.50 |

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள கையிருப்பு அளவுகளைவிட அதிகமாக அத்தியாவசியப் பொருட்களை பதுக்கி வைத்து கள்ளச்சந்தையில் விற்கும் வணிகர்கள்மீது தமிழ்நாடு எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய் (கையிருப்பு கட்டுப்பாடு) ஆணை 2008, தமிழ்நாடு பயறுவகைகள் மற்றும் கோதுமை (கையிருப்பு கட்டுப்பாடு) ஆணை 2007, தமிழ்நாடு அரிசி (கையிருப்பு கட்டுப்பாடு) ஆணை 2008 ஆகியவற்றின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் சீராக வழங்கல் சட்டம் 1980-ன்கீழ் தடுப்புக் காவலில் வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்